# பல்துறை வல்லோன் கலாமணி

ஈழத்தில் இசைநாடகப் பாரம்பரியத்தைப் பேணிப் பாதுகாத்துவரும் முன்னோடிகளில் ஒருவராக, சிறந்த அண்ணாவியாராக, மனங்கவர் நடிகராக, செவிக்கினிய இசைக் கலைஞராக, கலை இலக்கியப் படைப்பாளியாக, விமர்சகராக, ஆன்மீக இலக்கியச் சொற்பொழிவாளராக, ஆற்றல்மிகு ஆசிரியராக, பல்கலைக்கழக விரிவுரையாளராக, சமூக ஆர்வலராக என்று பல்வேறு பரிமாணங்கள் ஒரு சேர வல்லவரான கலாநிதி கலாமணி அவர்களை ஆழத்து முத்துக்களில் பதிவுசெய்வதில் பெருமிதம் கொள்கிறோம்.

பெயருக்கு ஏற்றாற்போல் கலையிலும் கல்வியிலும் உயர்ந்து நிற்கும் கலாமணி அவர்கள் அல்வாய் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சிறந்த இசை நாடகக் கலைஞனும் வேலுச் சோதிடர் வழிவந்த சோதிடருமான சபாபதி தம்பிஐயா - பர்வதம் தம்பிஐயா இணையருக்கு மகனாக 04.02. 1952ல் பிறந்தவர்.

அல்வாய் மனோகர கான சபாவின் அண்ணாவியராக, நாடக ஆசிரியராக விளங்கிய கலாமணியின் தந்தையார் தம்பிஐயா அவர்கள் சாமணந்துறைப் பிள்ளையார் கோவிலில் சிவராத்திரியின் போது இசை நாடகங்கள் மேடையேற்றும் கைங்கரியத்தை ஆரம்பித்து வைத்தவர். புகழ்பூத்த இசை நாடகக் கலைஞர்களான பெ. அண்ணாச்சாமி மாஸ்டர், நடிகமணி வி.வி. வைரமுத்து, வசாவிளான் மார்க்கண்டு, அச்சுவேலி மார்க்கண்டு, நாடகத் திலகம் நற்குணம், திகவில் வேலுப்பிள்ளை, சோக சோபித சொர்ணக் கவிக்குயில் அரியாலையூர் வி.கே. இரத்தினம், அரியாலையூர் வே. ஐயாத்துரை போன்றவர்களுடன் இணைந்து நடித்த பெருமைக்குரியவர் தந்தையார் தம்பிஐயா அவர்கள்.

தனது தந்தையையே இசை நாடகக் குருவாகக் கொண்ட கலாமணி, தந்தையாரின் அண்ணாவியத்தில் மேடையேறிய நாடகங்களில் சிறு சிறு பாத்திரங்களை ஏற்று நடித்து நாடகவுலகில் பிரவேசித்தார். அரிச்சந்திரா மயான காண்டத்தில் லோகிதாசனாக, அயலாத்துப்பிள்ளையாக நடிக்க ஆரம்பித்த கலாமணி பின்னாட்களில் தன் தந்தையாருடனும் மற்றும் வி.வி. வைரமுத்து, அண்ணாச்சாமி, கே.வி.நற்குணம், வி.என். செல்வராஜா போன்ற மூத்தகலைஞர்களுடன் சேர்ந்து நடித்ததை தன் வாழ்நாளில் மறக்கமுடியாத நினைவுகளாகக் குறிப்பிடுகிறார்.

கலாமணி அவர்கள் க.பொ.த(சா.த) படித்துக் கொண்டிருக்கும் போது... ''படித்துப் பட்டம் பெற்றபின் தான் இனி நாடகத்தைத் தொடரவேண்டும். பட்டம் பெற்று நடித்தால்



தான் நாடகத்துக்கு மதிப்பு வரும். இல்லாவிட்டால் கூத்தாடிகள் ஆட்டம் என்பார்கள்'' என்று தந்தையார் வலியுறுத்தி ருந்தார். இதன் பிரகாரம் கல்வியில் தீவிர கவனம் செலுத்தத் தொடங்கினார்.

யா/தேவரையாளி இந்துக்கல்லூரியில் ஆரம்பக் கல்வியையும், யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலத்தில் உயர் கல்வியையும், இலங்கை பேராதனை பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானமானி – பௌதிகவியல் சிறப்புப் பட்டத்தையும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கல்வி டிப்ளோமா பட்டத்தையும் பெற்றவர். பின்னர் அவுஸ்திரேலியாவிலுள்ள University of Wollongong என்ற பல்கலைக்கழகத்தில் முதுகல்வியியல்மானிப் பட்டமும் தொடர்ந்து கல்வியியற் கலாநிதிப் பட்டமும் பெற்ற கலாமணி அவர்கள் தலைசிறந்த மாணவர்களை உருவாக்கும் அரும்பணியில் அயராது உழைத்து வருகிறார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பௌதிகவியல் உதவி விரிவுரையாளராக தனது தொழிலை ஆரம்பித்த கலாமணி இலங்கை பனை அபிவிருத்திச் சபையில் சந்தைப்படுத்தும் உத்தியோகத்தராகவும், யா/புனித பத்திரிசியார் கல்லூரியில் பட்டதாரி ஆசிரியராகவும் கடமையாற்றி இன்று யாழ்.



பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளராகவும், கல்வியியற்துறையின் பதில் தலைவராகவும், சட்டத்துறைத் தலைவராகவும் செயலாற்றி வருகிறார்.

தந்தையின் வாக்குக்கிணங்க பட்டம் பெற்ற பின்னர் 'வாலிவதை' என்னும் நாடகத்தைத் தன் தந்தையைக் கொண்டு எழுதுவித்து முதன் முதலாக அண்ணாவியம் செய்து கலாமணி மேடையேற்றினார். தந்தையாரின் மறைவின் பின்னர் அவர் பொறுப்பில் இருந்த 'அல்வாய் மனோகர கான நாடகசபா' அமைப்பாளராக பொறுப்பேற்றுக்கொண்ட இவர் பல நாடகங்களில் நடித்தும், அண்ணாவியம் செய்தும் வருகிறார். வாலிவதை, பூதத்தம்பி, சத்தியவான் சாவித்திரி, ஸ்ரீவள்ளி, கோவலன் கண்ணகி, பவளக்கொடி, ஆத்மலிங்கம், பக்தப் பிரகலாதா, மார்க்கண்டேயர், கண்ணப்பன், பக்த நந்தனார், கர்வபங்கம், காத்தவன் கருணை, பாரிஜாதம், சதி சுலோச்சனா, பாஞ்சாலி சபதம் என்பன இதுவரை இவர் அண்ணாவியம் செய்த இசை நாடகங்களாகும். இவரது பூதத்தம்பி நாடகம் 46 மேடைகளை இதுவரை கண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

சிறந்த இசை ஆளுமையும், பாட்டுத் திறனும் கொண்ட கலாமணி இசை நாடகங்களில் முக்கிய பாத்திரங்களில் தோன்றிச் சிறப்புச் செய்தார். அவர் நடித்த இசை நாடகங்களும் ஏற்ற பாத்திரங்களும் பின்வருமாறு.

| இசைநாடகம் | பாத்திரம் |
| --- | --- |
| பூதத்தம்பி | - பூதத்தம்பி |
| வாலிவதை | - இராமன் |
| சத்தியாவன் சாவித்திரி, | - சத்தியவான், சாவித்திரி |
| ஸ்ரீவள்ளி | - நாரதர், முருகன் |
| கோவலன் கண்ணகி | - கோவலன் |
| பவளக்கொடி | - அரிச்சுணன் |
| மார்க்கண்டேயர் | - மார்க்கண்டேயர் |
| கண்ணப்பன் | - சிவகோசரியார் |
| பக்த நந்தனார் | - வேதியர் |
| சதி அகல்யா | - இலக்குமணன் |
| பாஞ்சாலி சபதம் | - விதுரர் |

இவை தவிர, 'காத்தவராயன்' என்ற சிந்துநடைக் கூத்தில் காத்தானாகவும், 'ஒரு பயணத்தின் கதை' என்ற வட்டக்களரி கூத்தில் உரைஞனாகவும் நடித்துள்ளார்.

மேலும் பாரம்பரிய கூத்து, இசை நாடகங்களுடன் நின்றுவிடாது நவீன நாடகங்களிலும் அனுபவமிக்க இவர் 'மானுடன் என்பது புல்லோ', 'விட்டில் பூச்சி', 'நூறு பூக்கள் மலரும்', 'சூரியன்', 'விஞ்ஞான தீபம்', 'மனுஷா மனுஷா' ஆகிய நவீன நாடகங்களை நெறியாள்கை செய்ததுடன் அதில் சிலவற்றில் நடித்துமுள்ளார்.

அவுஸ்திரேலியாவில் பட்டக்கல்வி பயிலும் காலத்தில் அவுஸ்திரேலிய எழுத்தாளர் விழாவில் 'பூதத்தம்பி', சிட்னி முருகன் ஆலய நிதிக்காக 'சத்தியவான் சாவித்திரி' அவுஸ்திரேலிய பல்கலைக்கழக மாணவர்களுக்காக 'பாஞ்சாலியின் சபதம்' ஆகிய இசை நாடகங்களை அண்ணாவியம் செய்து மேடையேற்றியதோடு சிட்னியில் இசை நாடகப் பட்டறை ஒன்றையும் நடத்தினார். அத்துடன் இளைய பத்மநாதனின் அண்ணாவியத்தில் மேடையேறிய பிரெக்டின் 'ஒரு பயணத்தின் கதை' என்ற கூத்தில் பிரதம உரைஞராகவும் பாடகராகவும் கலாமணி விளங்கினார்.

கலாபூஷணம் மெற்றாஸ் மெயில் அவர்களின் யாழ்ப்பாணம் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டு நிறுவனம் பதிவு செய்த பூதத்தம்பி, பவளக்கொடி, நல்லதங்காள் ஆகிய இசைநாடகங்களின் இறுவெட்டில் முக்கிய பாத்திரங்களில் பாடி நடித்துள்ளார். மேலும் திருமறைக் கலாமன்றம் வெளியிட்ட 'இசை நாடகப் பாடல் மெட்டுக்கள்' என்ற இறுவெட்டில் 25 பாடல்களைப் பாடியுள்ள கலாமணி தற்போது யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகத்தின் தலைவராக விளங்கி வருகிறார்.

இவரது இசைநாடகப் பங்களிப்பைப் பாராட்டி வடமராட்சி பயூன் சிதம்பரப்பிள்ளை கலைக் குழுமம் கலாமணி அவர்களுக்கு 'இசை நாடகக்கோன்' என்ற பட்டத்தை வழங்கிக்

## ஆழத்து முத்துக்கள் 120

- ப. ஸ்ரீஸ்கந்தன் -

கௌரவித்துள்ளனர்.

நாடகங்கள் தவிர்ந்து, தேசிய கல்வியற் கல்லூரியின் வெளியீடாக வந்த ஆசிரியத்தின் மகத்துவத்தை எடுத்துக் காட்டுகின்ற 'ஒப்பிலாமணி' என்று குறும்படத்தில் ஒப்பிலாமணி என்ற கதாநாயகன் பாத்திரத்தை ஏற்றுப் பாடி நடித்திருந்தார். இக்குறும்திரைப் படம் யாழ் மாவட்டத்தின் பெரும்பாலான பாடசாலைகளில் திரையிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு நடிப்புடன் மட்டும் நின்றுவிடாது ஆக்க இலக்கியத்துறையிலும் இவர் ஈடுபட்டுவருகிறார். சிறந்த சிறுகதை எழுத்தாளரான இவரது 'நாட்கள்... கணங்கள்... நமது வாழ்க்கைகள்', 'பாட்டுத் திறந்தாலே', 'அம்மாவின் உலகம்' ஆகிய சிறுகதைத் தொகுதிகள் நூல்களாக வெளிவந்துள்ளன. இவை தவிர, 'ஏனிந்த தேவாசுர யுத்தம்' என்ற கவிதைத் தொகுதி, 'இளையோர் இசை நாடகங்கள்' என்ற நாடக நூல், 'புதிய கண்ணோட்டங்களும் புதிய அர்த்தங்களும்' என்ற இலக்கிய விமர்சன நூல் மற்றும் 'மாற்றம் காணும் கல்வி உலகுடன் இணைதல்' என்ற ஆசிரியர் கல்விப் பாடநூல் ஆகிய நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

கலாமணியின் மனைவி குயின் ஜெஸிலி ஒரு முதுகலைமாணிப் பட்டதாரி. இவர்களுக்கு பரணீதரன், முரளிதரன், மதனாஹரன் ஆகியோர் பிள்ளைச் செல்வங்கள். இவர்களில் பரணீதரனை ஆசிரியராகக் கொண்ட 'ஜீவநதி' என்ற மாதாந்த இலக்கியச் சஞ்சிகை தரமாக வெளிவந்து கொண்டிருக்கிறது. ஜீவநதியின் பதிப்பாசிரியராக கலாமணி உள்ளார்.

சிறந்த இலக்கிய விமர்சகராகவும் பேச்சாளராகவும் விளங்கும் இவர் கந்தபுராணம் விரிவுரைகளையும் அறநெறி வழிகாட்டல் ஆலய வழிபாடு போன்ற ஆன்மீகச் சொற்பொழிவுகளையும் நிகழ்த்தியுள்ளார்.

இத்துணை சிறப்புகள் பொருந்திய கலாமணி அவர்கள் கல்வியியலில் ஆற்றிவரும் பங்கு மகத்தானது. கல்வியின் மேம்பாட்டுக்காக மாணவர்களுக்கும், ஆசிரிய மாணவர்களுக்கும் கல்வியில் உளவியல் சம்பந்தமான பல கருத்தரங்குகளையும் பயிற்சிப் பட்டறைகளையும் நாடு பூராகவும் தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளிலும் நடாத்தி வருகிறார். இதன் உச்சமாக இலங்கை தேசிய கல்வி நிறுவனத்தினர் ஆசிரியப் பயிற்சி நெறிக்காக வெளியிட்ட கல்வி உளவியல், கல்வித் தத்துவம், கல்வி முகாமை, கல்வி அளவீடும் மதிப்பீடும் கணிப்பீடும் ஆகிய நூல்களை பேராசிரியர்கள் ராஜா குணவர்த்தன, C. காரியவாசம், மரீ பெரேரா ஆகியோருடன் இணைந்து எழுதியுள்ளார்.

கலையும் கல்வியும் ஒரு சேரப் பெற்ற கலாநிதி கலாமணி அவர்கள் நீடு வாழ்ந்து மென்மேலும் பணியாற்ற தாய்வீடு வாழ்த்துகிறது.



sriskandan@thaiveedu.com